<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>O.S.No.267/2021</u>**

பெயர் : சாந்தி ( வா.,சா.1)

த/பெ. : ராஜா

தேதி : 23.02.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.
குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–

நான் தாக்கல் செய்த வழக்குரையின் 4வது பக்கத்தில் 2வது அயிட்ட சொத்தானது செல்வராஜ் சம்பாதித்த பணத்தினை கொண்டு தன்னுடைய மனைவி கமலம் என்பவர் பெயரில் 06.10.1979 தேதியில் செல்வராஜ் பணத்தினைக்கொண்டு பொது உறுப்பினர் என்ற முறையில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். எனது வழக்குரையில் எனது அப்பாவின் பணத்தினைக்கொண்டு இந்த சொத்து வாங்கப்பட்டது என்று கூறியுள்ளீர்களா என்றால் எனது அப்பாவின் வருமானத்தில் வாங்கியது என்று குறிப்பிடப்படவில்லை. எனது தாத்தாவின் 3 மகன்களின் சம்பாத்தியத்தில் வாங்கப்பட்டது ஆகும். அப்படி குறிப்பிட்டு வழக்குரையில் கூறப்படவில்லை என்றால் சரியல்ல. பொது உறுப்பினர் என்ற முறையில் வாங்கப்பட்ட சொத்தாகும். எனது அப்பாவிற்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. எனது அப்பாவிற்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 பெண் குழந்தைகள் 1 ஆண்குழந்தை உள்ளது. எனது அப்பா என்ன வேலை பார்க்கிறார் என்றால் எனது அப்பா அரசு மருத்துவமனையில் CCWபிரிவில் வேலை செய்து வந்தார்.

எனது அப்பாவிற்கு வருகின்ற வருமானத்தை கொண்டு குடும்பத்தையும் குழந்தைகளையும் பராமரிக்கவே பணம் இருந்ததினால் பொது உறுப்பினர் பெயரில் சொத்து வாங்குவதற்கு பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தெரிந்து எனது அப்பா மாதாமாதம் ரூ.2,000/– அவரது பெற்றோருக்கு கொடுத்து வந்தது எனக்கு தெரியும். எனது அப்பா பணம் கொடுத்து வந்தார் என்பதற்கு ஏதாவது ஆவண சாட்சியம் தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை. எனது அப்பா அவரது பெற்றோருக்கு ரூ.2,000/– எந்த வருடத்தில் கொடுத்து வந்தார் என்றால் நான்

சிறு வயதாக இருக்கும்போதே எனது அப்பா கொடுத்து வந்தது எனக்கு தெரியும். எந்த வருடத்திலிருந்து கொடுத்தார் என்றால் எனக்கு 8 அல்லது 10 வயது இருக்கும்போதிலிருந்தே அவர் கொடுத்து வந்தார் என்று எனக்கு தெரியும். நான் இந்த வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றாலும் அதனால் தான் நான் வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றுசொன்னாலும் சரியல்ல., எனக்கு விபரம் தெரிந்ததிலிருந்து நானே எனது பாட்டியிடம் போய் பணம் கொடுத்து வந்தேன். 1978 ல் எனது அப்பாவின் மாத சம்பளம் எவ்வளவு இருக்கும் என்றால் ரூ.7000/- லிருந்து ரூ.10,000/- இருக்கும். 1978ஆம் வருடம் எனது அப்பாவிற்கு ரூ.300/-தான் மாதம் வருமானம் என்றாலும் ஆனால் 7000, 10000 இருக்கும் என்று சாட்சியம் அளிப்பதிலிருந்தே நான் வழக்கிற்காக பொய் செல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பிறந்த வருடம் 1981 ஆகும், அதன் பிறகுதான் எனக்கு தெரிந்த விபரத்தை கூறினேன். நான் பிறப்பதற்கு முன்பு எவ்வளவு சம்பளம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது.

மேற்கண்ட தாவா 2வது அயிட்ட சொத்து நான் பிறப்பதற்கு முன்பு வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் பிறப்பதற்கு முன்பு இந்த சொத்து வாங்கப்பட்டதினால் அந்த சொத்து எவ்வாறு வாங்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா பாட்டி உயிரோடு இருக்கும்போதே எனது அம்மா, அப்பா எல்லோரிடமும் அவர்கள் விவசாயம் செய்து வாங்கிய சொத்து என்று கூறியுள்ளார்கள். அவ்வாறு கூறியிருந்தால் அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்திருந்திருப்பேன் என்றாலும். அதற்கான ஆவணம் இல்லாததால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தின் 3வது பக்கத்தில் 4ம் பிரதிவாதி பானுமதி தனது 1/4 பாகத்தை 3ம் பிரதிவாதியின் தகப்பனாரான ரவி என்பவருக்கு விடுதலை பத்திரத்தின் மூலம் விடுதலை செய்து கொடுத்துவிட்டார் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளது என்றால், அது அவர்கள் எதிர்வழக்குரையில் அவர்கள் குறிப்பிட்டுள்ளவற்றை எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டள்ளேன். எனது தகப்பனார் குணசீலன் அவர்கள் மனோகரன் அவர்களுக்கு எழுதிக்கொடுத்த பாகபாத்திய விடுதலை பத்திரத்தில் 1வது சாட்சியாக சிவசங்கரன் அவர்கள் கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அதனை விசாரணை செய்ய நானும், எனது

தாயாரும், எனது சகோதரரும் சாட்சியான எனது சித்தப்பா சிவசங்கரனை விசாரிக்க சென்றோம் என்றால் சரிதான். ஆனால் அவர் பங்காளி பிரச்சனைக்காக நான் கையொப்பம் கேட்டார்கள் அதற்காக போட்டேன் என்று கூறினார், எனது தகப்பனார் வரவில்லை என்றும் கூறினார். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் நேரில் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து கையொப்பம் போட்டதால் தான் செட்டில்மெண்ட் பத்திரமானது பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

எனது சகோதரி கவிதாவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 பிள்ளைகள். அவர்களுக்கு முதல் மகனுக்கு தற்போது 34 வயது, 2வது மகளுக்கு தற்போது 21 வயது ஆகும். எனது சகோதரி கவிதாவின் கணவரை பிரிந்து வாழ்ந்து வந்ததால் அவர் திருப்பூரிலேயே மறுமணம் செய்து வாழ்ந்து வருகிறார். எனது சகோதரியின் 2வது மகள் 2வது கணவருக்கு பிறந்த மகளாகும்., 2வது கணவரின் பெயர் செல்வராஜ் ஆகும். நான் கூறுவது அனைத்தும் பொய் என்றாலும் கவிதாவின் முதல் கணவரான முத்தமிழ்செல்வன் என்பவர் செட்டில்மெண்ட் ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது சகோதரியும் முதல் கணவரும் பிரிந்து வாழ்வது தெரிந்தே அவரை அழைத்துச்சென்று கையொப்பம் பெற்றுள்ளார்கள். எனது சகோதரி கவிதாவிற்க்கு சட்டப்படி விவாகரத்து பெறப்பட்டதா என்றால் சட்டப்படி பெறவில்லை. காவல் நிலையத்தில் வைத்து எழுதி வாங்கிக்கொண்டார். தற்போது வரையிலும் சட்டப்படியான கணவர் முத்தமிழ்செல்வன் என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3வது பிரதிவாதி பாரதிக்கும் எனக்கு சுமூகமான உறவுமுறை உள்ளதா என்றால் ஏதேனும் குடும்ப நிகழ்ச்சி நடந்தால் அழைத்துக்கொண்டு போய் வருவேன். சுமூகமான உறவு தான் உள்ளது. தற்போது சுமூகமான உறவு முறையில் தான் இருந்து வருகிறோம் என்றால் சரிதான். 16.09.2005 தேதியன்று நெடுஞ்செழியன் வழக்கறிஞர் மூலமாக குணசீலன், செந்தில்குமார், ஜெயபாரதி ஆகிய மூவரும் சேர்ந்து மனோகரன் என்பவருக்கு அறிவிப்பு ஏதேனும் அனுப்பினார்களா என்றால் இல்லை. தாவா 1 அயிட்ட சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றாலும், தாவா 2வது அயிட்ட சொத்து 2ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றாலும், இந்த விபரம் 2005ஆம் ஆண்டே தெரியும் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் ஆவணங்களும்

மற்றும் 2ம் பிரதிவாதியின் ஆவணங்களும் மோசடியான ஆவணங்களும் மோசடியான ஆவணங்கள் என்பதற்கு, ஏதேனும் குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த ஆவணங்களை நீக்க சொல்லி ஏதேனும் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் அனைத்தும் அவர்களின் தனிப்பட்ட சொத்துக்கள் என்று தெரிந்தே மோசடியாக தாவா சொத்துக்களை பறிப்பதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.